SRI A. A. RASHEED : Sir, May I know the cause of action and is it a fact that the condition of the Mental Hospital patients worsened after the fire accident?

THE HON. SRI M. A. MANICKAVELU : This has nothing to do with the condition of the patients of the Mental Hospital. This fire is reported to have taken place on account of short circuit in electrical wiring.

SRI A. VEDARATHNAM : *இந்த விபத்திஞல், உயிர் சேதமோ, வேறு அபாயமோ ஏறபடடதுண்டா ?*

THE HON. SRI M. A. MANICKAVELU : *நல்ல வேளேயாக அப்படி ஒன்றும் ஏற்படவில்லே.*

Primary Health centres

*** 508 *Q.*—SRI N. R. THIAGARAJAN :** *கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரை ஜில்லாவில் எத்தனே பிரைமரி ஹெல்த் சென்டர்கள் திறக்க திட்டமிடப்பட்டது ?

(ஆ) அவைகளில் எத்தனே எங்கெங்கு திறக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Eight, Sir.

(*b*) Six centres have so far been opened at the following places :—

1. Dhadicombu.
2. Natham.
3. Thirupparankundram.
4. Dombacheri.
5. Alanganallur.
6. Athoor.

SRI N. R. THIAGARAJAN : *ஆறு செண்டர்கள் என்ருல், பாக்கியெல்லாம் எப்பொழுது திறக்கப்படும் ? 503-வது கேள்விக்கு பதிலளிக்கையில், மேசையில் வைக்கப்பட்டிருக்கிறது என்ருர்கள். இந்த வரிசையில் ஒன்றும் இல்லே . . .*

MR. SPEAKER : *கனம் அங்கத்தினர் அவர்கள் அப்பொழுதே அதைச் சொல்லியிருக்கவேண்டும்.*

THE HON. SRI M. A. MANICKAVELU : *இந்த நிலேயங்களே யெல்லாம், அவ்வப்பொழுது ஏற்படுத்தி வருகிருேம். கொஞ்சம் தாமதம் என்ருல், அதற்குக் காரணம் போதுமான டாக்டர்கள் கிடைக்கவில்லே. இப்பொழுது முன் வருகிருர்கள்; இனி துரித மாகத் திறக்கப்படும்.*

7th September 1960]

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் (ஸ்ரீ தியாகராஜன்) அவர்கள் 503-வது கேள்வியின் பதிலைச் சரியாகப் படிக்கவில்லை. will be placed............. as soon as possible என்று இருக்கிறது. அதை அவர்கள் கவனிக்கவில்லை என்று தோன்று கிறது. இன்றைக்கு வைக்கிறோம் என்று இல்லை.

Community Development Projects

* 509 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா— 9 a.m.

(அ) நம் மாநிலத்திலுள்ள (i) இரண்டு பிர்க்காக்கள், (ii) ஒரு பிர்க்காவிலுள்ள சமுதாய நலத் திட்டப் பகுதிகள் எத்தனை ?

(ஆ) இவைகள் எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன ?

(இ) வடாற்காடு மாவட்டம் போளூர் சமுதாய நலத் திட்டத்தின் மக்கள் தொகை எவ்வளவு ?

(ஈ) அதை இரண்டு சமுதாய நலத் திட்டப் பகுதிகளாகப் பிரிக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) (i) Number of blocks consisting of one firka 71

(ii) Number of blocks consisting of one firka and part of firka or firkas 108

(iii) Number of blocks consisting of one or more part firkas only 62

(iv) Number of blocks consisting of two or more firkas, *or*, two firkas and part firka or firkas 124

The blocks in the Kanyakumari district numbering 9 cannot be classified on the above basis.

(*b*) According to the All-India Scheme, each block is expected normally to consist of about 100 villages with a population of about 66,000.

(*c*) 99,591.

(*d*) No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஸார், அதிகப்படியான மக்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் போளூர் சமுதாய நல திட்டத்தை அங்கு அமைத்திருக்கிறார்கள். அதே காரணமாக சுண்டசாலையிலும் அதிகப்படியான மக்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அமைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அங்கு சமுதாய நல திட்டத்தை பிரிக்க சர்க்கார் முன்வந்திருக் கிறார்கள். அங்கு மலை ஜாதியினர் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த திட்டத்தினால் எந்த விதமான பலனும்